# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1999/2 - 2016 දෙසැම්බර් මස 26 වැනි සඳුදා - 2016.12.26

*1999/2 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**சனாதிபதியின் பணிப்புரை**

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன.

1. கே. எல். எல். விஜேரத்ன அவர்கள்
2. நிமல் பண்டார அவர்கள்
3. தயானந்த விதானகமச்சி அவர்கள்
4. சரித்த ரத்வத்தே அவர்கள்
5. பேராசிரியர் கித்சிறி மடபாத்த லியனகே அவர்கள்
6. லெஸ்லி ஷெல்டன் தேவேந்திர அவர்கள்
7. சுரேஷ் ஷாஹ் அவர்கள்
8. சனத் ஜயந்த எதிரிவீர அவர்கள்
9. வி. ரெகுநாதன் அவர்கள்
10. கமால் முஸ்தபா அவர்கள்
11. பேராசிரியர் குணபால நாணாயக்கார அவர்கள்
12. திருமதி சுஜாதா குரே அவர்கள்
13. ஜெரீ ஜயவர்த்தன அவர்கள்
14. எஸ். தில்லைநடராஜா அவர்கள்
15. பேராசிரியர் அநுர ஏக்கநாயக்க அவர்கள்
16. செம்பகுட்டிகே சுவர்ணஜோதி அவர்கள்
17. பி. கே. யு. நிலந்த பியரத்ன அவர்கள்

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

18. என். எச். பத்திரண அவர்கள்
19. எச். ரி. தயானந்த அவர்கள்
20. ரி. பீ. மடுவேகெதர அவர்கள்
21. வைத்தியர் விமல் கரந்தகொட அவர்கள்
22. சுரங்க நாவுல்லகே அவர்கள்

ஆகியோருக்கு

வாழ்த்துக்கள் !

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதிய சனாதிபதியின் பணிப்புரையின் மூலம் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் ;

மேலும் மேற்குறித்த ஆணைக்குழுவின் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளின் உற்பத்தித்திறனை உயர்த்துவதற்காக பல்வேறு துறைகளிலான மனித வளங்களின் பிரதிநிதித்துவம் மிக முக்கிய காரணியாக இனங்காணப்பட்டுள்ளதாதலாலும் ;

மேலும் இவ்வாணைக்குழுவின் அங்கத்துவக் கட்டமைப்பின் பல்வகைத்தன்மை மேலும் விரிவாக்கப்பட வேண்டுமென்பது தென்படுவதாதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், வெலிகொடகே குமாரவங்ச டி சில்வா அவர்களின் விவேகம், திறமை, நேர்மை என்பனவற்றின் மீது மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டு, சொல்லப்பட்ட வெலிகொடகே குமாரவங்ச டி சில்வா அவர்களை, மேற்சொன்ன சனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இத்தால் நியமிக்கின்றேன்.

இலங்கைச் சனாநாயக சோசலிசக் குடியரசின் அரச இலச்சினையின் கீழ், இரண்டாயிரத்து பதினாறாம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆம் திகதி கொழும்பில் அளிக்கப்பட்டது,

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

1- 224

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.